சிவமயம்.

ஓம் மகாகணபதயேநம:

சுப்பேர - ஸ்ரீ தண்டாயுதபாணி
தோத்திரப்பா.

இது

திருக்களாண்டவரென்னும்

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர் பாதசேகராராய

ஸ்ரீ சுப்பைய சுவாமிகளால்

இயற்றப்பெற்று,

காரைக்குடி

S. L. R. M. சா. லெ. ரா. ம.

செட்டியப்ப செட்டியாரவர்களால்

சென்னை:

வைஜயந்தி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1913.

உ

சிவமயம்

ஓம் மகாகணபதயேநம:

ஈப்போ - ஸ்ரீ தண்டாயுதபாணி

தோத்திரப்பா.

காப்பு.

திருவெலா நிறைய மீப்போச் செல்வமா நகரில் நாளு
மருவுறுந் தண்ட பாணி மரைபுரை பாதப் போதிற்
றரவெணுந் தோத்தி ரப்பாத் தனையருள் புரிய வீரக் [மால்.
கரிமுகத் திறைவன் பொற்றாட் கருத்தினி லிருத்து வே

சீர்பெறும் வணிகர் போற்றச் சிறப்புறு மீப்போ மன்னு
மேர்பெறு மிறைவ வள்ளி காதல விமையோர் போற்றுந்
தார்பெறுந் தண்ட பாணி யைங்கரன் றுணைவ நாயேன்
சீர்பெற நின்றா ளன்றிச் சிந்தியேன் சிந்தி யேனே. (1)

சிந்தனை தினமு மல்குற் சீர்முலை யுழன்று கன்றி
நொந்தன னந்தோ மெத்த நுடங்கின னருளல் வேண்டுங்
கந்தநின் பாதப் போதைக் கனவினு மறவி லாதேன்
சந்தெழு மீப்போ மன்னுஞ் சண்முகா போற்றி போற்றி.( )

சண்முகம் படைத்த தேவே சதுர்மறை பொலியும் வாழ்வே, விண்முகத் தமரர் போற்ற வெற்றிவேல் விடுத்த கோவே, பண்முகத் தொழுகும் பாவே பாவினற் பயனே செய்ய, தண்முகச் சோலை யிப்போத் தனிலமர் தேவ தேவே. (3)

தேவர்தங் குறைக டீரத் திருக்கைவே றன்னை யேவி
யாவரு மஞ்சுஞ்சூர பற்பனை யழித்த நின்றன்
சேவலும் மயிலும் வேலுஞ் சிந்தையிற் சிந்திப் பார்தம்
மூவினை தளரு மிப்போ முருகனே யருளல் வேண்டும். (4)

வேண்டுநின் னடிய ரீட்டம் வேண்டுநின் பதத்தி லன்பே, வேண்டுநின் னுருவ மன்றி வேறொன்றைக் காணு வாழ்க்கை, வேண்டுமுக் கரணத் தாலு மின்னலை விழையாச் சீலம், வேண்டிவை யீயி னீப்போ வேலவ மேலோ னியானே. (5)

யானென தற்று நின்றே யாப்பினைப் பாடா நிற்கு
மீனமில் புலவர் பின்போ யிசையினைக் கேளா வாழுங் [டா
கோனுனக் கெனது யாப்பென் குறையினைக் கூறுங் கண்
யூனமன் றீப்போ வாழு மும்பர்கட் கரசே போற்றி. (6)

அரசனல் வாழ்வு மென்னும் அமரர்தம் வாழ்வு மென்னும்
ஒருசொனின் னுமம் பாடு முண்மையர் வாழ்வுக் கென்றே
யெரிசொரி காந்தி மாழைக் கனிமனு மீப்போ வாழும்
பரிசறு நின்றன் பாதம் பாடியான் பணிகின் றேனே. (7)

பணியணி பரமற் குற்ற பரமசற் குருவே போற்றி
குணமணி குரவர் போற்றுங் குரைகழற் ருளா போற்றி
வணங்ணை வேலா போற்றி வள்ளியின் கள்ளா போற்றி
மணமுணுஞ் சோலை யீப்போ மன்னவா போற்றி போற்றி.

போற்றுவ ரருணை நாதர் பொய்யிலாப் புலவர் முன்னோர்
சாற்றுவர் சுவைப்பா நாயேன் சாற்றுதற் கரிய னேனும்
நாற்றமும் பேற நின்ற ஞமமே நவிற்று கின்றே
னேற்றரு ளீப்போ மன்னு மிறைவனே மறைவ லானே.()

மறைகளு மயர்ந்து நேதி வசனங்கொண் டுணர்த்து நின்னை, மறையவன் முதல யாரும் வழுத்திடற் குரியர் கொல்லோ, முறையள வெனிஞே யானு மங்ஙனே முருகா செஞ்சொற், சிறுமிய ராடு மீப்போச் செல்வனே செந்தில் வாழ்வே. (10)

செந்திலை விடுத்துத் தங்கஞ் செவ்வனே விளையு மீப்போச்
சுந்திர நகரம் போந்தா யென்றிடிற் சுகுண னேநீ
தந்திர மென்ன சொல்வேன் றன்னடி யவரைக் காக்கு
மந்திரப் பொருளே நின்னைக் கனவினு மறக்க லாமோ.

மறப்பர்க ளெமனின் றென்றே மறந்தபொய்ப் பேதை யார்தாம், சிறப்புறு மீப்போ மன்னும் செல்வநின் றிருத்தா டன்னை, யுறப்பெறு மடிய னேஞே வுளமிக வுருகி யேத்தி, யறப்பல வுருவ னேயென் றனுதினம் வணங்கா நிற்பேன்.

நிற்பல வடிவ மோங்கி நிலவுறல் காணு மூடர்
பற்பல வேறு மென்றே பரவுவர் பாவி னுலும்
சொற்பொரு ணிறைந்த நின்றன் சுந்தர மூர்த்தத் தேனும்
நிற்பர்க ளென்று லிப்போ நிமலனே யவரென் கண்ணே.

கண்ணினுண் மணிபோ லென்னைக் காத்தருள் கதிர் வேற் செல்வா, மண்ணினி னென்னென் னுசை மருவுற வைத்தா யென்பா, லண்ணலே யவற்றி னின்று மடியனை யெடுத்தி டாயே, லெண்ணுதற் கரிய வீப்போ விறைவனே யென்செய் வேனே. (14)

செய்யுமெண் பத்து நான்கு சேரிலக் கத்தின் மேலாம்
மையறு மனுட யாக்கை மடவனேன் பெற்று மென்னே
பொய்யற நினது பாதப் போதினை நினைகி லேனே
செய்யுறு மீப்போ மேவுஞ் செம்மலே கடைக்கண் செய்யே.
செய்வதொன் றறியே னுயேன் சிந்திக்க வறியே னுயே
னுய்வதற் கறியே னுயே னென்றையு மறியே னுயேன்
மைவளர் வள்ளி பங்கா வள்ளலே கள்ள மில்லை
யுய்வகை செய்வா யிப்போ வும்பர்கள் பரவுந் தேவே. (16)

வேறு.

தேவர்கள் பரவுந் தேவனே யினிய தெய்வயா னையின் றிருக் கொழுநா, மூவர்கள் பரவும் வாழ்வினை யடியேன் முந்துறச் சொந்தமே புரிவாய், காவுகு மலர்க ளருவிகள் கனிகள் கண்ணிறை கவினுறை தருஞ்சீர்ப், பாவுறை தரு மீப் போவுறுந் தண்ட பாணியே பரமசற் குருவே. (17)

குருவெனப் பரமன் கொண்டபோ தென்னை குழை செவி வார்த்தனை யதனை, யருவனே யடியேற் குரைத்தருள் புரிந்தா லாருனைக் கடிபவ ரையா, பெருவனப் புகந்த பெருமனே யமரர் பேணுறும் வளம்பொழிற் றிலங்கிப், பெருகுறு மீப்போப் பிறங்குறுங் கரியின் பின்னவ வென் னுயிர்த் துணையே. (18)

துணையென நினையே கொண்டுளா ரிகத்துந் தன் னுறு பரத்தும்வாழ்ந் தனரா, லிணையிலா மூட னுயினே னந்தோ வென்செய்வான் றுணைக்கொளா துழன்றே, னணையுமின் றேனுந் துணையெனக் கொளுமா றண்ணலே யடியனேற் கருள்வாய், மணநிறை மகிழம் பூநெறி யீப்போ மன்னிய வள்ளிநா யகனே. (19)

நாயக வுலகின் நாயக வமரர் நாயக வெவர்க்குமிங் கெனக்கும், பேயகத் தோடு திரிந்திட லடியன் பேரறி வாளநீ யறிந்துந், தூயகங் கொடுத்தே யாட்கொளத் தடை யென் றோகையை யுகைத்தசே வகனே, சேயக மெனுமீப் போவுறும் வீர சேகர சேவலங் கொடியோய். (20)

கொடியனை யறத்தின் மிடியனை யறவுங் கோணுறுங் தடியனைப் பணியா, வடியனை யினிமே லாகினுந் தயையி லாளுதல் கடனின தலவோ, நொடியினின் மயிலின் மிசை யிசைந் தளவி னுவல்புவ னங்கள்சுற் றிடுவோய், படியினி லீப்போ நகருறை தண்ட பாணியே பரமதே சிகனே.(21)

தேசி கனருளு நெறிதனி னடவாத் திருடனை மூர
டனை யறியா, தேசுறு நெறியி னடந்திடுங் கொடிய விரு
டனை யுறவுசெய் தவனைப், பேசுறு நெறியிற் பிறங்கவே
வைத்தாற் பிழையென நினையெவர் கடிவர், மாசற வணிகர்
வழுத்திட வீப்போ மன்னிய வென்னுயிர்க் குயிரே. (22)

உயிரிலக் கணத்தை யறிவனோ நாயே னுன்னுடை
நல்லிலக் கணத்தைத், துயரற வறிந்து கொள்வனோ நினது
துன்பமி லின்பமே பயக்கு, மயலறு கருணை யெளி யன்மே
லின்றேன் மாசனென் றெண்ணிட றருமோ, குயில்மயில்
பயிலும் குளிர்பொழி லீப்போக் குடியெனக் கொண்டநா
யகனே. (23)

நாயக மிகவுங் குயிற்றியே நலிந்தே னுன்மறை முடி
வினி னிலங்குந், தூயநின் னுணர்வை யடியனேற் களித்
துத் துயரெலாந் துடைத்தருள் புரிவாய், தாயகந் திருவிற்
கென்னவே வளங்கள் சகலமு நிறைந்துநீ ளருவி, பாயக
நிறையீப் போவுறை தண்ட பாணியே யருணிறை பவனே.

பவந்தவிர்ந் தழிவில் பதந்தனை யடையப் பரமனே
சரவண பவனே, யுவந்துன தளவி னுமமேபுகன் றிங் குயர்ந்
தவர் நடைகடைப்பிடியா, தவந்தனினரிய காலமேகழிக்கு
மடியனைக் காக்குநா ளுளதோ, சிவந்தநன் மரைகள் பொரு
ந்துமீப் போவிற் செறிந்தருள் கொழிக்குமா தவனே. (25)

மாதவர் சருகுங் காய்கனி யறலு மன்னிய பசிப்பிணிக் கருந்தி, மாதவம் புரிந்து நின்னுரு வாக மங்கையர் கொங் கையூ டழிவா, ஞாதவன் வெயிலிற் புழுவென வலையு மடிய னேற் கருணின தாமோ, மாதவன் மருக முருகவீப் போ வின் மருவிய பருவநன் மதியே. (26)

மதிகொலோ நீதான் மலைமகள் வதன மாகடற் பொங் குறப் பருதி, யுதயமோ நீதா னுதயமில் சிவன்ற னுயர் தரு வதனதா மரைக்கோர், நிதிகொலோ நினது தமயனு மெனது நின் மலவாரியற் கைய, பதிகொலா மெனவீப் போவினிற் பதிந்த பாவலர் மேவுசே வகனே. (27)

சேவலங் கொடியும் செருநர்தம் முதிரஞ் சிவந்திட மாந்தும்வே லதுவு, மாவலில் விளைந்த வாரமு தனைய வம் மைய ரிருவரு மயிலும், பாவல பொலிய வென்முனே காட்சி பணித்தருள் காலமு முளதோ, காவலிற் பொலியீப் போவி னிற் குடிகொள் கந்தனே கருணைமா கடலே. (28)

கடலெழூஉ தரங்க பேனபுற் புதங்கள் கடலுறு மற லலா திலைபோற், சுடருரு நினைவிட் டுலகுயி ரெவையுஞ் சொல்லிடற் கில்லையா மெனினு, மடலுற மெனது மனந் தின மயலை யாற்றிட மாற்றிட வறியேன், சுடலையி னடஞ் செய் பவன்சுத வீப்போச் சுந்தர நகருகந் தவனே. (29)

தவமிகு கவிகள் தண்ணருள் பொழியத் தருகவி யன் பினு லாமென், னவமிகு கவியோ வத்தகை யலவா லாயினு

மாதவர் சருகுங் காய்கனி யறலு மன்னிய பசிப்பிணிக் கருந்தி, மாதவம் புரிந்து நின்னுரு வாக மங்கையர் கொங் கையூ டழிவா, ஞாதவன் வெயிலிற் புழுவென வலையு மடிய னேற் கருணின தாமோ, மாதவன் மருக முருகவீப் போ வின் மருவிய பருவநன் மதியே. (26)

மதிகொலோ நீதான் மலைமகள் வதன மாகடற் பொங் குறப் பருதி, யுதயமோ நீதா னுதயமில் சிவன்ற னுயர் தரு வதனதா மரைக்கோர், நிதிகொலோ நினது தமயனு மெனது நின் மலவாரியற் கைய, பதிகொலா மெனவீப் போவினிற் பதிந்த பாவலர் மேவுசே வகனே. (27)

சேவலங் கொடியும் செருநர்தம் முதிரஞ் சிவந்திட மாந்தும்வே லதுவு, மாவலில் விளைந்த வாரமு தனைய வம் மைய ரிருவரு மயிலும், பாவல பொலிய வென்முனே காட்சி பணித்தருள் காலமு முளதோ, காவலிற் பொலியீப் போவி னிற் குடிகொள் கந்தனே கருணைமா கடலே. (28)

கடலெழுந் தரங்க பேனபுற் புதங்கள் கடலுறு மற லவா திலைபோற், சுடருரு நினைவிட் டுலகுயி ரெவையுஞ் சொல்லிடற் கில்லையா மெனினு, மடலுறு மெனது மனந் தின மயலை யாற்றிட மாற்றிட வறியேன், சுடலையி னடஞ் செய் பவன்சுத வீப்போச் சுந்தர நகருகந் தவனே. (29)

தவமிகு கவிகள் தண்ணருள் பொழியத் தருகவி யன் பினு லாமென், னவமிகு கவியோ வத்தகை யலவா லாயினு

மன்பினை வேண்டிச், சிவசிவ வெனவென் சிந்தையி லெழு
ந்த சிறுமொழி யிஃதிதைச் சிதையே, னவவருள் புரிதி
நாதனே யீப்போ நண்ணிய புண்ணியர் வளமே. (30)

வேறு.

வளமெலாங் கொடுப்போய் போற்றி வள்ளியின்
கொழுநா போற்றி, யுளநிறை யமுதே போற்றி யுன்னுதற்
கரியாய் போற்றி, களமெலா மொழிப்பாய் போற்றி கண்
ணுதல் குமரா போற்றி, விளைநிலப் பொன்னு ரீப்போ
மேவிய துரையே போற்றி. (31)

போற்றியென் குரவ னுகிப் பொலிதிருக் களரில்
வைகும், நாற்றிசை புகழும் வீர நாயகன் றுணைவ போற்றி,
சேற்றிதழ்க் கமலஞ் சேருஞ் செல்விசே ரீப்போ மன்னும்,
மாற்றறும் பொன்னே யுன்னை வணங்கினன் பெறநின்
சீரே. (32)

ஈப்போ – ஸ்ரீ தண்டாயுதபாணி

தோத்திரப்பா

முற்றிற்று.

ஸ்ரீமத் - சண்முகநாதன் றிருவடியே துணை.

த்தை வேண்டிய வேண்டிய இடங்களிற்பெற்று ஹிந்திபாஷையில் எளியோரு முணரும்வண்ணம் இயற்றப்பெற்றது. அதுவும் தமிழ்மக்களாய நம்மனோர்க்குப் பயன்படாமை கருதி சமஸ்கிருத ஆத்மபுராணத்தையும் ஹிந்தியாத்மபுராணத்தையுந் தழுவிச் செந்தமிழ் வசன நடையில் கோயிலூர் மடாலயம் வேதாந்தபாஸ்கரராய் விளங்கும் ஸ்ரீமத் - சுப்பைய சுவாமிகளால், உலகோபகாரார்த்தமாய் மொழிபெயர்க்கப்பட்டது. இது சுமார் 200 பாரத்தில் முடிவுபெறும்.

ராயல் 8-பக்கங்கொண்ட 50-பவுன் பளபளப்புள்ள கிளேஸ் கடிதத்தில் 12-பாரமடங்கிய சஞ்சிகை வடிவாய் மாதமொருமுறை வெளியிடப்படும். சஞ்சிகை ஒன்றுக்குக் கிரயம் அணு 6. மேற்படி புத்தகம் சமாப்தமானவுடன் உயர்ந்த பையிண்டு செய்து விலை ரூபாய் 8 விகிதம் விற்கப்படும். அல்லது முன்பணம் அனுப்புவோர்க்கு விலை ரூபாய் 5 விகிதம் பையிண்டுசெய்து கொடுக்கப்படும். அவ்வாறின்றி சஞ்சிகையாகவே வேண்டுமென்றெழுதினாலும் மாத மாதம் அனுப்பப்படும். மேற்கூறிய நிபந்தனைக்குடன்பட்டவர்கள் புத்தகவிளம்பரத்தில் குறித்த விலாசங்கட்கு ரூபாயை அனுப்பின் வரவுவைத்து ரசிது அனுப்பப்படும். அவ்வாறு முன்பணம் அனுப்புவோர்கள், தங்கள் விலாசத்தை விவரமாயெழுதவேண்டும்.

இம்மஹா புராணமொன்றை வாசிப்பதனாலேயே சகல புராணங்களின் இரகஸ்யார்த்தங்களும் வேதாந்தத்தின் அத்தியந்த அந்தரங்க அபிப்பிராயங்களும் குன்றின்மேலிட்ட விளக்குபோல் தெற்றென விளங்குமாதலின், புருஷார்த்தத்தை அடைய விரும்பும் ஆன்மாக்கள் ஒவ்வொருவரும் அத்தியவஸ்யமாய் வாங்கத்தக்கதேயாம்.

சிவமயம்.

ஓம் மகாகணபதயே நம:

ஸ்ரீ ஆத்மபுராணப் பிரகடனம்.

அன்பர்களே! அகண்டப் பிரஹ்மாகார விருத்தி யொன்றினனே அஞ்ஞான பங்கமாய்ச் சொரூப சாக்ஷாத்கார வாயிலாய் அனர்த்தநிவிருத்தி ஆனந்தப்பிராப்தி வடிவ மோக்ஷத்தை யெய்தலாமேயன்றி, மற்றொருவகையானுங் கூடாது. அத்தகைய அகண்டகார விருத்தியானது வேத சிரோபாகங்களாகிய உபநிஷத்துக்களாற் பெறத்தக்கதாம், ஆனல். அவ்வுபநிடதங்கள் ஸ்ரீசங்கரபாடிய சகாயங்கொண்டு மேதாவிகளாகிய அறிஞாலறியத்தக்கனவேயன்றி நம்மனோராலறியத்தக்க தொன்றன்றும். ஆயினும் மந்த மதியினர் பொருட்டுப் பெருந்தயையால் ஸ்ரீ சங்கரானந்த சுவாமிகளால் (ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளின் ஆசிரியரென வழங்கும் தேசிகோத்தமரால்) அநேக உபநிடத அர்த்தங்களை யறிவிக்கும் ஸ்ரீ ஆத்மபுராணமெனப் பெயரிய பெருநூலானது சமஸ்கிருதத்தில் சுலோகவடிவமாய்த் திருவாய்மலர்ந்தருளப்பட்டது.

அதுவும் வியாகரண வல்லமையிலார்க்குப் பயன் படாமை கருதி ஸ்ரீ காசிமாநகரத்தின்கண் ணெழுந்தருளியிருந்த ஸ்ரீ சிற்கனானந்தகிரி சுவாமிகளால் (நியாயப்பிரகாசிகை, தத்துவானுசந்தானம், சுடார்த்ததீபிகை என்னும் நூல்களை ஹிந்திபாஷையி லியற்றியருளிய ஆசிரியரால்) மேற்படி சமஸ்கிருத ஸ்ரீ ஆன்மபுராணமானது ஸ்ரீ நிச்சலதாஸ் அவர்களின் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ காகராம் பண்டித சிகாமணிகளாற் செய்யப்பட்ட வியாக்கியான